

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## பனிக்கட்டி உற்பத்தி நிலையம் மற்றும் குளிர்பதன கிடங்கு




எல்லா மீனும் வித்துப்போச்சா?
இல்ல நண்பா. இன்னிக்கு அந்த அளவுக்கு விற்பனையாகல, அதனால பிடிபட்ட மீனு எல்லாம் கெட்டு போய்டுமோனு கவலையா இருக்கு.
அதனால என்ன பனிக்கட்டில சேமித்து வைக்கலாமே?
அவ்வளவு பனிக்கட்டிக்கு என்ன பண்றது ? நம்ம ஊர்ல தான் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஏதும் இல்லையே...
ஏம்பா, இப்பந்தான் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தில 10, 20, 30 மற்றும் 50 டன் கொள்ளளவு கொண்ட பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அமைக்கவும், 10 மற்றும் 20 டன் கொள்ளளவுல குளிர்பதன கிடங்கு அமைக்கவும் அரசு மானியம் தராங்களே...
அப்புறம் இதை பற்றி கூடுதல் தகவல் எங்கு கிடைக்கும்?



நமது மாவட்ட மீன்வளம் மற்றும்
மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்
அலுவலகங்களில் சென்று அங்கு
விசாரித்தால் உனக்கு தேவையான
கூடுதல் விவரங்களும் மற்றும்
விண்ணப்பமும் கிடைக்கும். நீ
அங்கே சென்று விசாரித்து கொள்.



ரொம்ப நன்றி தேசப்பா,
நான் இப்பவே நேரில்
சென்று விசாரித்துக்
கொள்கிறேன் நண்பா

**மானியத்தில் உற்பத்தி நிலையம் மற்றும் குளிர்பதன கிடங்கு அமைக்க தகுதியுடையவர்கள்**

1. மீன்வளத்துறையில் உள்ள சுய உதவிக்குழுக்கள், கூட்டு பொறுப்புக் குழுக்கள்.
2. மீன்வள மேம்பாட்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு இணையங்கள், தொழில் முனைவோர் மற்றும் தனியார் நிறுவனங்கள்.
3. மீன்வளர்ப்போர் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் / நிறுவனங்கள்
4. மத்திய மற்றும் மாநில அரசு மற்றும் அதன் நிறுவனங்கள் போன்றவை விண்ணப்பித்து பயன்பெறலாம்.

**மானிய விவரம்**

- பொதுப் பிரிவு – 40% மானியத் தொகை – ரூ. 1.20 இலட்சம்
- பட்டியலின / பழங்குடியினர் மற்றும் பெண்கள்– 60% மானியத் தொகை – ரூ. 1.80 இலட்சம்

**சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. திட்ட அறிக்கை (DPR)
2. நில ஆவணங்கள்
3. ஆதார் அட்டை நகல்
4. வங்கி கணக்கு புத்தக நகல்